விலை ரூபா 4-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 32 தை 6 றஜப் 2 இதழ்: 268

யாழ்ப்பாணம் சனிக்கிழமை 19-1-1991

## காசோலைப்பணகொடுப்பனவு புலிகளுக்கு தொடர்பில்லை

(யாழ்ப்பாணம்)

அரச திணைக்களங்களினால் வழங்கப்படும் சம்பளக் காசோலைகளைப் பணமாக்குவதற்குச் சில முதலாளிகள் ஆயிரம் ரூபாவுக்கு நூறில் இருந்து 150 ரூபா வரை தரகுப் பணம் பெறுவதாக முறையிடப்படுகிறது. இந்த "பணமாக்குட" பணியைப் புரிவோர் தமது நியாயமற்ற சுரண்டலுக்கு விடுதலைப் புலிகள் மீதும் பழிசுமத்தும் முயற்சியை மேற்கொண்டுள்ளனர்,

இந்தப் பணம் வழங்கும் முறையில் விடுதலைப் புலிகளுக்குஎவ்வித தொடர்புமில்லை என்பதுடன் மக்களைப் போராட்டச் சூழ்நிலைகளைப் பயன்படுத்தி இன்னலுக்குள்ளாக்கும் எந்தச் செயலுக்கும் விடுதலைப் புலிகள் ஒப்புதலோ ஒத்துழைப்போ அளிப்பதில்லை என்பதை எமது மக்கள் நன்கறிவார்கள், என விடுதலை புலிகளின் மக்கள் முன்னணி தெரிவித்துள்ளது;

(வி)

## ● நூற்றுக்கும் மேல் ஈராக்கியர் பலி

# இரசாயன, நச்சு ஆயுதம் மூலம் ஈராக் பதிலடி கொடுக்குமாம்

## - பாக்தாத் நகர் தீப்பற்றி எரிகிறது -

[டோக்கியோ]

ஈராக்மீது அமெரிக்க, நேசப்படைகளினது கொடூர தாக்குதலுக்குவிரைவில் இரசாயன நச்சு ஆயுதங்கள்மூலம் கடும் பதிலடி கொடுக்கப்படுமென ஜப்பானிலுள்ள ஈராக்கியதூதர் எச்சரித்துள்ளார். இதற்கிடையில் குவைத் எல்லையை ஆயிரக்கணக்கான டாங்கிகள், ஏவுகணைகள் சகிதம் சவூதி பாலைவனங்களூடாக ஒரு லட்சம் பன்னாட்டுப் படைகள் சமீபித்துவிட்டன. மேலும் இஸ்ரேல்மீது நடந்த தாக்குதல்மூலம் வளைகுடாப்போரில் ஓர் திருப்பம் ஏற்படும் சாத்தியமும் அதிகரித்துள்ளது.

★ இஸ்ரேல் இந்த யுத்தத்தில் ஈடுபடும் பட்சத்தில் அமெரிக்காவிற்கு ஆதரவளிக்கும் அரபுநாடுகள் எதிராகமாறும் ஆபத்து அதிகரித்துள்ளது.

★ இஸ்ரேலை பதிலடி நடவடிக்கையில் ஈடுபடவேண்டாமென அமெரிக்காவும், பிரிட்டனும் வற்புறுத்தியுள்ளன.

★ நாளுக்கு 2000 தடவைகள் அமெரிக்க, நேசப்படைகளதும் விமானங்கள் ஈராக், குவைத் மீது தாக்குதலை நடத்துகின்றன.

★ எதிரிப் படைகளின் 5 விமானிகளை ஈராக் கைதுசெய்ததாக அறிவித்துள்ளது;

★ ஈராக் தலைநகர் பாக்தாத்தின்மீது மேற்கொள்ளப்பட்ட ஆயிரக்கணக்கான தாக்குதால் நகர் தீப்பற்றி எரிவதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

★ நேட்டோ நாடுகளும் இந்த யுத்தத்தில் குதிக்கும் சாத்தியம் அதிகரித்துள்ளது.

★ 5 ஈராக் பீரங்கிப் படகுகள் அழிக்கப்பட்டுள்ளன.

★ இஸ்ரேலிய 20 விமானங்கள் அமெரிக்க நேசப்படைகளுடன் இணைந்து தாக்குதல் நடாத்தியுள்ளதாக ஈராக் தெரிவித்துள்ளது;

★ லட்சக்கணக்கான இஸ்ரேலியர்கள் தரைக்குக் கீழ் மிகுந்த பாதுகாப்புடன் பதுங்குகுழிகளில் விஷவாயு பாதிக்காத முகமூடியுடன் உள்ளனர்,

## பதுங்கு குழியில் முக்கிய சந்திப்பு

★ ஈராக்கில் அதிபர் ஹுசேனை ஈராக்குக்கான சோவியத் தூதுவர் பாதுகாப்பான பதுங்கு குழி ஒன்றுக்குள் நேற்றிரவு அவசரமாகச் சந்தித்தார்,

★ வளைகுடா யுத்தம் 3-ம் உலகப் போராக மாறும் சாத்தியம் அதிகரிப்பதாக லிபிய அதிபர் கேர்ணல் முஅம்மர் கடாபி எச்சரித்துள்ளார்.

★ அரபு நாடுகளிலும், முஸ்லிம் நாடுகளிலுமுள்ள அமெரிக்கர்களை உடனடியாக அமெரிக்கத் தூதரகங்களுக்குச் செல்லுமாறு அமெரிக்கா உத்தரவிட்டுள்ளது.

★ மிகக் கடுமையான விமானத் தாக்குதலில் நூற்றுக்கும் மேற்பட்ட ஈராக்கியர்கள் கொல்லப்பட்டதாக ஈராக் அறிவித்துள்ளது;

## 80 விமானங்கள் அழிப்பு

★ 80 விமானங்களும், பல குறூஸ் ஏவுகணைகளும் தாக்கி அழிக்கப்பட்டதாக ஈராக் அறிவித்துள்ளது; ஈராக்கிய 'ஹுட்', 'பஸ்ரிக்' ஏவுகணைகள் தாக்குதலில் ஈடுபட்டுள்ளன.

★ இதுவரை 2000க்கும் மேற்பட்ட விமானங்கள் ஈராக், குவைத்தில் 110 இலக்குகளை 4000க்கும் மேற்பட்ட தடவைகள் தாக்கியுள்ளன. இதில் 80,000 மெற்றிக் தொன் வெடிபொருட்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன;

★ ஈராக்கின் இராணுவ, பொருளாதார நிலைகளே தொடர்ந்தும் தாக்கப்பட்டு வருகிறது. எண்ணெக் கிணறுகள், அணுநிலைகள், ரசாயன ஆயுத ஆலைகள், தொலைத் தொடர்பு நிலையங்கள் தாக்கப்பட்டுள்ளன.

★ நேற்றும் 2வது நாளாக இரவுவேளையிலேயே கடும் விமானத் தாக்குதல் ஈராக், குவைத்மீது நடாத்தப்பட்டது;

(4-ம் பக்கம் பார்க்க)

## வடபகுதி மேல் தாக்குதல் முஸ்தீபு

(கொழும்பு)

வடபகுதி மீது மிக விரைவில் பெரும் தாக்குதலை மேற்கொள்ள இராணுவத்தினர் தயாராகி வருவதாக அமைச்சர் திரு; ரஞ்சன் விஜயரத்ன தெரிவித்துள்ளார்;

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் இத்தாக்குதல்கள் புலிகளுக்கு எதிராக நடத்தப்படுமென்று அமைச்சர் தெரிவித்தார்;

இதேவேளை கிழக்கில் பெரும் இராணுவ நடவடிக்கை நடைபெற்று வருவதாகவும் அவர் கூறினார்;

## கிழக்கில் படையினர் கொடுமை அதிகரிப்பு

(மட்டக்களப்பு)

கிழக்கில் இராணுவத்தினதும் தமிழ் இயக்கங்களினதும், கொடுமைகள் மோசமடைந்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது;

கொக்கட்டிச்சோலையில் 15ம் திகதி வீடுகளும் கடைகளும் இவர்களால் கொள்ளையிடப்பட்டபின் தீயிடப்பட்டுள்ளன;

திருமலையில் நிலாவெளி வீதியில் 6-ம் கட்டை இராணுவ முகாம் படைகள், பல பொது மக்களைக் கைதுசெய்து பலமாகத் தாக்கி முகாமுக்குக் கொண்டு சென்றுள்ளன.

(வி)

## வளைகுடாவில் குறைவு யாழ்குடாவில் அதிகரிப்பு

[யாழ்ப்பாணம்]

வளைகுடாவில் எண்ணெவிலை பெருமளவு வீழ்ச்சியடைந்துள்ளபோதிலும் யாழ்குடாவில் எண்ணெவிலை பெருமளவு

(4-ம் பக்கம் பார்க்க)

## நிரு ரியூசன் சென்ரர்
ஸ்ரேசன் றேட், கோண்டாவில்.

**புலமைப் பரீட்சை - 1991**

**வகுப்புகள் நடைபெறுகின்றன**

கணிதம்: திரு. நயினை, S. S. பிள்ளை
தமிழ்: திரு. சுந்தரலிங்கம்

(ஏ 991)


## ஓராண்டு நினைவஞ்சலி

"தாயிற் சிறந்த ஒரு கோயிலுமில்லை"



திருமதி புவனேஸ்வரி வேலுப்பிள்ளை

| மலர்வு: | உதிர்வு: | திதி: |
|---|---|---|
| 11-05-1931 | 19-01-1990 | 07-02-1991 |

அம்மா நீர் பிரிந்து ஓராண்டு சென்றாலும்
உங்கள் நினைவாக நாம் தவிக்கின்றோம்!
உமது இடம்நிரப்ப யாரும் இல்லை என்று ஆயிற்று,

அம்மா எமது இதயத்தில் தென்றலாகி வீசி
உமது இதய துடிப்பை நிறுத்தியதனால்
எமது இதயம் தீயால் சுட்டது போல் ஆயின்று,

அம்மா அன்பினால் எமை தாலாட்டி உறங்க வைத்தாய்
உமை இயற்கைத தாய் தாலாட்டி உறங்க
வைத்ததனால்
எமை தாலாட்டி உறங்கவைக்க யாரும்
இல்லையென ஆயிற்று.

ஒம் சாந்தி! சாந்தி! சாந்தி!

"Golden Fish"
71, (16), இரண்டாம்
குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

உங்களின் பிரிவால்
துயருறும்:
குடும்பத்தினர்.

(சி-4276)

## வரி விளம்பரம்


### கல்வி

கணிதம் O/L ஏப்ரில், டிசம்பர் பரீட்சைகளில் விசேட சித்தி, அதி விசேட சித்தி பெறுவதற்கு பரீட்சை தாள்கள் சென்ற 15வருடங்களாகத் திருத்திய பட்டதாரி ஆசிரியரால் கற்பிக்கப்படும். 85, சிவன் கோவிலடி, திருநெல்வேலி. (சி-4269)

### தரன் ஸ்ருடியோ

கறுப்பு வெள்ளை படங்கள் என்லாட்ஜ்மென் படங்கள், றபர் சீல், பிளாஸ்ரிக் போட், விளம்பர போட் மற்றும் ஓவிய வேலைகள் 24, யாழ். வீதி, (ரெட்ணா வீதி), யாழ்ப்பாணம். (சி 4274)

### "நிலவே நீ மயங்காதே"

மீரா வெளியீடு இந்திரா பிரியதர்ஷினி எழுதியது தவிக்கும் பெண்மனம், தடுமாறும் பெண்மனம், செய்வதறியாது திகைக்கும் பெண்மனங்களை இந்நாவலில் சந்தியுங்கள் துர்க்கா ஸ்ரேசனேர்ஸ் சுன்னாகம், திருக்கணிதம் சாவகச்சேரி, ஸ்ரீகாந் புத்தகசாலை, நல்லூர். (சி-4272)


### பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் இம்மாதம் 20-ம் திகதி மாலை 5 மணிக்கு நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

## இராசிபலன்

**19-01-1991 சனிக்கிழமை**

மேஷம்: காரிய வெற்றி, குடும்ப கௌரவம்.

இடபம்: குடும்ப மகிழ்ச்சி, புதிய முதலீடு, தொழில் பாதிப்பு.

மிதுனம்: குடும்பக்கஷ்டம் வேண்டாத பிரச்னை, நண்பர்கள் தொல்லை.

கடகம்: அடிமை நிலை, அதிகார மகிமை, கடன் சுமை,

சிங்கம்: இனசன வருகை, விருந்துபசாரம், பெரியோர் ஆசி,

கன்னி: தொழில் பாராட்டு பண வரவு, கடன் வசூல், குடும்ப ஒற்றுமை.

துலாம்: அந்நிய வாசம், புத்திரர் கவலை, மனச்சுமை

விருச்சிகம்: விபரீத எண்ணம், குடும்பப்பிரிவு, அகால போசனம்.

தனுசு: குடும்பத்தில் சுப காரியம், நண்பர் உதவி, தொழில் பாராட்டு.

மகரம்: மனப்போராட்டம், கடன் சுமை, இனசனப் பகை.

கும்பம்: காரிய பலிதம், தொழில் லாபம், குடும்பத்தில் மகிழ்ச்சி.

மீனம்: நரம்புப் பலவீனம் ஆலய தரிசனம்.

'ஜோஸ்யர்'


## NEW SCIENCE ACADEMY
KANNATHIDY, JAFFNA

**ZOOLOGY**
By
திரு. தங்கராஜா B. Sc,

92 A/L குழியவியல் (CYTOLOGY)
SAT., SUN. 4-00—5-00 P. M.

91 A/L பிறப்புரிமையியல் (GENETICS)
SAT., SUN. 3-00—4-00 P. M.

90 A/L PAPER CLASS (PAST PAPERS)
TUE: WED. 6-30—7-30 A. M.

(ஏ 992)


## கண்ணீர் அஞ்சலி

### அமரர் பொன். மகேந்திரன்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பழைய மாணவரும், கல்லூரியின் நீண்ட கால ஆசிரியரும், முன்னாள் பிரதி அதிபரும், எமது சங்கத்தின் மூத்த உறுப்பினருமாகிய பொன். மகேந்திரன் அவர்களின் திடீர் மரணச் செய்தி சகல உறுப்பினர்களுக்கும் அதிர்ச்சி தருவதாக அமைந்துள்ளது.

சங்கம் தனது ஆழ்ந்த கவலையை அவர் குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் தெரிவிக்கின்றது.

டபிள்யூ. எஸ். செந்தில்நாதன்
தலைவர்

சுந்தரம் டிவகலாலா
பொதுச் செயலாளர்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்,
யாழ்ப்பாணம்.

## அஞ்சலி

### அமரர் பொன். மகேந்திரன்

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரின் பழைய மாணவரும் நண்டகாலம் கல்லூரின் ஆசிரியராகவும், பிரதி அதிபராகவும் பணியாற்றி அண்மையில் ஓய்வுபெற்றவருமாகிய

**அமரர் பொன். மகேந்திரன் அவர்களின்**

திடீர் மறைவுக்கு யாழ். இந்துக்கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சங்கம் தனது ஆழ்ந்த கவலையையும் அஞ்சலியையும் அவர்தம் குடுமபத்தாருக்கு தெரிவிக்கின்றது.

க. சி. குகதாசன்
தலைவா / அதிபர்

க. பூபாலசிங்கம்
பொதுச்செயலாளர்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
யாழ்ப்பாணம். 19-01-1991.

## முக்கிய அறிவித்தல்

### யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
### நூற்றாண்டு விழா

எமது கல்லூரியின் பழைய மாணவரும், நீண்டகாலமாக ஆசிரியராகவும் பிரதி அதிபராகவும் பணியாற்றி அண்மையில் ஓய்வுபெற்ற

**திரு. பொன். மகேந்திரன்**

அவர்களின் திடீர் மறைவு காரணமாக, 18-1-1991 (பிற்பகல் நிகழ்ச்சிகளும்) 19, 20—1—1991ஆம் நாள் நிகழ்ச்சிகளும் மறு அறிவித்தல் வரும்வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளன.

க. சி. குகதாசன்
தலைவர்
நூற்றாண்டு விழாச் சபை.

சுந்தரம் டிவகலாலா,
கே. சிவராஜா.
செயலர்.
நூற்றாண்டு விழாச் சபை.

(ஏ 993)

## பலவீனத்தின் சவால்!

வானத்தை வில்லாக வளைப்பேன்; - மேரு மலையை சுண்டு விரலால் அசைத்து விடுவேன் என்றுஉணர்ச்சிமேலிட்டு சவால் விடுவது கெடு மதியாளர்களின் பலவீனமாகும்!

கோர யுத்தத்தின் கொடுமைகளை நேரில் கண்டு அனுபவித்த வல்லரசு நாடுகளே! வளைகுடாவில், ஈராக் நாட்டுக்கு வழங்கிய காலக்கெடு முடிவடைந்தும் ஆயிரத்தெட்டு தடவை ஆழமாக யோசித்து அதன் பின்னரே செடு பிடியுத்தத்தை தொடங்கியுள்ளன.

எமது நாட்டிலோ வெறும் யுத்த களங்களை மட்டும் பார்வையிட்டு உத்தரவு பிறப்பிக்கும் படைத்தளபதி திரு. ஹமில்டன் வணசிங்கா ஆறுமாத காலத்தில் புலிகளை அழித்து விடுவேன் என்று சவால் விடுத்துள்ளார்.

எதிர்த்து ஆடும் ஆட்டக்காரர் இல்லாத உதைபந்தாட்ட மைதானத்தில் ஆத்திர வெறி கொண்ட அணி ஒன்று தன்னந்தனியாக ஆடி, ஓடி எப்படியும் ஒரு 'கோல்' அடித்து சாதனை படைக்க முனைவது போல அரசு முப்படைத் தாக்குதல்களை தற்போது முனைப்புடன் நடாத்தி வருகின்றது!

ஆகோரத்தனமாகத் தாக்குதல்கள் நடாத்தப் போகின்றோம்! மக்களே விலகிக்கொள்ளுங்கள் என்று ''கருணை மழை'' வேறு ஹெலிகப்டர்கள் மூலம் அடிக்கடி பொழியப்பட்டு வருகின்றன!

ஆறுமாத காலமாக ஆடாத அதர்ம அழிப்பு ஆட்டமெல்லாமல் ஆடி உருப்படியாக எதனையும் சாதிக்காத அரச படைகள் அழித்தொழிப்பதைத் தவிர புதிதாக எதனைச்சாதிக்கப் போகிறது என்று மக்களும் அதிகம் அலட்டிக்கொள்வதில்லை!

உலகநாடுகளின் கவனம் முழுவதும் வளைகுடாவில்குவிந்துள்ள இவ் வாய்ப்பான வேளையில்— அதுவும் விடுதலைப்புலிகள் மௌனம் சாதிப்பதைத்தனக்கு சாதமாக்கி ''தட்டிக் கேட்க யாருமில்லை'' என்ற அசட்டுத்துணிவில்முப்படைத் தாக்குதல்கள் முடுக்கி விடப்பட்டுள்ளதாக சந்தேகம் எழுந்துள்ளது!

அரசியல் தீர்வுக்கு உரியவழி காண விரும்பாத அரசு மேலும், கால அவகாசத்தை நீட்டும் சதிநோக்கில் இராணுவ நடவடிக்கையை தூபம்-போட்டுவளர்த்து வருகிறது!

ஆணவப் போர்தொடுத்து முடிவுகண்டவர்கள் உலகில் எவருமே இல்லை! பிரச்சனைத் தீர்வுகாணக்கூடியவாய்ப்புகள் அடுத்தடுத்து கதவைத்தட்டுவதேயில்லை.

எனவே! கிடைத்த சந்தர்ப்பத்தை நழுவவிடாத பருவத்தே பயிர் செய்து பிரச்சனைக்கு தீர்வுகாண முன்வருவது விவேகமானது!

— மயூரன்

# இஸ்ரேல் தலைநகர் மீது ஏவுகணை தாக்குதல்!

## ஈராக் மக்கள் இடம்பெயர்வு

(பக்தாத்)

வளைகுடா யுத்தத்தில் நேற்று அதிகாலை வரை அமெரிக்க நேச நாடுகளின் 60 விமானங்களை சுட்டு வீழ்த்தியுள்ளதாக ஈராக் அறிவித்துள்ளது. ஈராக்கின் குடிமக்கள்வாழும் பகுதியில் அமெரிக்க விமானங்கள் குண்டுவீச்சு நடத்தியதால் 28 பேர் பலியானதாகவும் 66 பேர் காயமடைந்துள்ளதாகவும் ஈராக் அறிவித்துள்ளது.

### தொடர்ச்சியான தாக்குதல்

இதேசமயம் ஈராக்கின் தொடர்ச்சியான ஏவுகணைத் தாக்குதலால் சவூதிஅரேபியாவின் பல எண்ணை சுத்திகரிப்பு நிலையங்கள் தாக்குதலுக்குள்ளாகி எரிந்துகொண்டிருப்பதாகவும் நேற்று அதிகாலை இஸ்ரேலில் ஈராக்கிய ஏவுகணைகள் ஐந்து வீழ்ந்து வெடித்துள்ளதாகவும் ஏஜென்சி செய்திகள் தெரிவித்துள்ளன.

வளைகுடாவில் அமெரிக்காவின் தாக்குதலை ஜோர்டான் ஜொரியா, கியூபா ஆகியநாடுகள் கண்டித்துள்ளதுடன் கிழக்கு பேர்லினில் சிறுவர்கள் உட்பட 20000 மக்கள் அமெரிக்காயுத்தத்தை ஆரம்பித்ததற்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

### பாகிஸ்தானில் ஆர்ப்பாட்டம்

பாகிஸ்தானில் பல முக்கிய நகரங்களில் அமெரிக்காவின் தாக்குதலுக்கு எதிர்ப்பு தெரிவித்து அமெரிக்க தூதராலயத்திற்கு முன் பெருந்தொகையானோர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதாகவும்அவர்களுக்கு எதிராக பொலிசார் கண்ணீர் புகைக்குண்டுகளை, வீசியதுடன் குண்டாந்தடிப் பிரயோகத்தையும்மேற்கொண்டதாகத் தெரியவருகிறது.

போர் ஆரம்பமாகி பதினெட்டு மணி நேரத்தில் அமெரிக்க நேச நாடுகள் 3 தடவை விமானத் தாக்குதல் நடாத்தியதாகவும் ஈராக்— குவைத் வான் பிரதேசத்தை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளதாகவும் அறிவிக்கப்படுகிறது.

போரை உடனடியாக முடிவுக்கு கொண்டுவரும்படி இந்தியாவில் உள்ள பல கட்சிகள் கோரியுள்ளன.

### மக்கள் வீடுகளில் தஞ்சம்

ஈராக்கிய ஏவுகணைகள் எதுவும் இஸ்ரேலிய ரடார் சாதனங்களுக்குப் புலப்படவில்லை என்றும் பின்னர் வந்த செய்திகள் தெரிவிக்கின்றன. தொடர்ந்தும் இஸ்ரேல் மீது ஏவுகணைத் தாக்குதல் நடத்தப்படுமென்ற அச்சத்தினால் மக்கள் வீடுகளில் பாதுகாப்புத் தேடிவருகின்றனர்.

இஸ்ரேலுக்கு ஈராக்கினால் ஏவப்பட்ட எட்டு ஏவுகணைகள் இரண்டு பொதுமக்கள் வாழும் குடிசனம் அதிகமாக உள்ள பகுதிகளில் வீழ்ந்து வெடித்துள்ளதாகவும், அவற்றில் ஒன்று இரசாயன வாயுக் குண்டு எனச் சந்தேகிக்கப்படுவதாகவும் இதனால் மக்கள் பாதிப்புஅடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### தரைப்படை விரைகிறது

சவுதி அரேபியாவில் நிலைகொண்டிருந்த பிரிட்டனின் தரைப் படைகள், குவைத் எல்லையை நோக்கி நகர ஆரம்பித்துள்ளன. இதே சமயம் தொடர்ந்தம் ஈராக் குவைத் மீது அமெரிக்கா வான் தாக்குதலை நடத்திய வண்ணம் உள்ளது.

ஈராக்கில் இருந்து நேற்று அதிகாலை முதல் பல்லாயிரக் கணக்கான மக்கள் ஈரான் பகுதிக்குள் ஊடுருவிச் செல்வதாக அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

### அகதிகளுக்கு ஏற்பாடு

இதேசமயம் இடம்பெயர்ந்து வரும் சுமார் 15 லட்சம் அகதிகளுக்கு உணவு, உடை, இருப்பிட வசதிகள் அளிப்பதற்கு ஐ. நா. அகதிகள் புனர்வாழ்வு ஸ்தாபனம் அவசர ஏற்பாடுகளைச் செய்துவருகின்றது.

இதுவரை சவூதி அரேபியா, இஸ்ரேல் மீது, ஈராக் 23 ஏவுகணைத் தாக்குதல்களை நடத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### 7 பொதுமக்கள் காயம்

இஸ்ரேல் மீது ஈராக் நடாத்திய திடீர் ஏவுகணைத் தாக்குதல்களுக்கு ஏழு பொதுமக்கள் காயமடைந்துள்ளனர்.

இவ் எதிர்பாராத கடும் ஏவுகணைத் தாக்குதல்களுக்குப் பதிலடி கொடுக்க இஸ்ரேல் அவசர அவசரமான எதிர்த் தாக்குதல்களுக்கு ஆயத்தமாகிவிட்டது.

### ஜோர்தான் ஊடாக

ஏவுகணைத் தாக்குதல்கள் ஜோர்தான் பிராந்தியத்தினூடாக நடாத்த இஸ்ரேல் திட்டமிட்டுள்ளது.

1967ம் ஆண்டு அரபு—இஸ்

(4-ம் பக்கம் பார்க்க)

## யுத்தமுனையில் ஹுசைன்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

★ ஈராக்கில் பல யுத்த முனைகளுக்கு அதிபர் ஹுசைன் சென்று வீரர்களை உற்சாகப்படுத்திவருகிறார்.

★ தாக்குதல்கள் குறித்து அதிபர் ஜோர்ஜ் புஷ், பிரிட்டிஷ் பிரதமர் ஜோன் மேஜர் திருப்தி தெரிவித்துள்ளனர்.

★ 7 விமானங்களைக் காணவில்லையென அமெரிக்கா, நேசநாடுகள் அறிவித்துள்ளன. இதில் 3 அமெரிக்காவினதும், 2 பிரிட்டனினதும், இத்தாலி, குவைத்தினதும் தலா ஒவ்வொன்றுமாகும்.

★ ஒவ்வொரு தடவையும் 40 விமானங்கள் சவுதியிலும், வளைகுடாவிலுள்ள கப்பல்கள்மீதுமிருந்து ஒநேரத்தில் சென்று தாக்குகின்றன. 3 மணி நேரத்தின் பின்பே தாக்குதலை முடித்து நிலைகளுக்கு திரும்புகின்றன.

★ ஈராக் ஜனாதிபதி மாளிகை தாக்குதலால் பலத்த சேதமுற்றதாக சோவியத் அறிவித்துள்ளது.

★ அமெரிக்க நேசநாட்டு படையில் வேறும் பல நாடுகள் சேர்ந்து தாக்குதலில் ஈடுபட்டுவருகின்றன.

★ ஈராக்கின் தலைநகரான பக்தாத்மீது நேசப்படைகளின் கடும் விமானத்தாக்குதல் நடைபெறும் இவ்வேளையில், நேற்று வெள்ளிக்கிழமை ஈராக்கின் அதிபர் ஹுசைன் பொதுமக்களுடன் சேர்ந்து வீதியால் நடந்துசென்று தொழுகையில் ஈடுபட்டதாகவும் கூறப்படுகின்றது.

★ ஹுசைனின் குடும்பத்தவர் மே. ஆபிரிக்க நாடான 'மொறரேனியா'வில் தங்கியுள்ளனர்.

## ஜப்பான் எதிர்க்கட்சிகள் கண்டனம்

★ அமெரிக்காவின் தாக்குதலுக்கு ஜப்பான் ஆதரவளிப்பதை அந்நாட்டு எதிர்க்கட்சிகள் கண்டித்துள்ளன எனினும் மேலும் பல ஆயிரம் டாலர் நிதிஉதவியை பிரதமர் கையூ வழங்கியுள்ளார்.

★ கடந்த 2 நாள் யுத்தத்தில் பலகோடி டாலர் செலவாகியும், சேதமடைந்துமுள்ளன. ஈராக் மீது இதுவரை நடந்த தாக்குதல் மூலம் ஈராக் 15 வருடங்கள் பின்னோக்கி சென்றுவிட்டதாக அமெரிக்கா அறிவித்தது.

★ இதுவரை இந்த யுத்தத்தில் கொல்லப்பட்டவர்களது தொகை குறித்து உத்தியோக பூர்வ அறிவிப்பு வெளியிடப்படவில்லை.

★ துருக்கி தளங்களை அமெரிக்க படைகள் பயன்படுத்துகின்றன. இங்கு 30க்கும் மேற்பட்ட விமானங்கள் வந்துபோகின்றன.

★ யுத்தம் நீடிக்கும் கால அவகாசத்தை பொறுத்து அமெரிக்காவுக்கு 28,000 பில்லியன் டொலர் முதல் 36,000 பில்லியன் டொலர் வரையிலாக செலவு ஏற்படும் என்று அமெரிக்க காங்கிரஸ்சபை மதிப்பிட்டுள்ளது. யுத்தம் மூண்டதிலிருந்து இரண்டு ஆயிரத்துக்கும் மேற்பட்ட தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளது இதற்கு, மட்டும் இதுவரையில் 500 மில்லியன் டாலர் செலவாகியுள்ளதாம்!

ஏவுகணை ஒவ்வொன்றுக்கும் 1.3 மில்லியன் டொலர் செலவாகிறது என்றும் ஏவுகணைகளின் தரத்தைப்பொறுத்து அதன் செலவு கூடிக்குறையுமென்றும் கணிப்பிடப்பட்டுள்ளது.

## ஹெலி மூலம் துண்டுப்பிரசுரம்

★ குவைத்திலுள்ள ஈராக்கிய படைகளை உடனடியாக சரணடையுமாறு இராணுவ நிலைகள் மீது அமெரிக்க ஹெலிகள் துண்டுப்பிரசுரங்களை வீசியுள்ளன.

★ ஈராக்கின் பெருமளவு விமானங்கள் தரையில்வைத்து அழிக்கப்பட்டதாக அமெரிக்கா அறிவித்தது, ஆனால் பல தரைக்கு கீழே பாதுகாப்பாக உள்ளதாக ஈராக் தெரிவித்தது.

★ ஈராக் மீது பெரும் தாக்குதல் நடாத்தப்பட்டதாக அமெரிக்கா அறிவித்ததை யடுத்து உலக சந்தையில் எண்ணை விலை பெருமளவு வீழ்ச்சியடைந்துள்ளது.

★ சமாதான முயற்சிக்கு ஈரான் தயாரென அறிவித்துள்ளது.

★ உலகின் நவீனரக முன்னணி விமானங்கள் இந்த யுத்தத்தில் ஈடுபடுகின்றன.

★ வளைகுடாவிலிருந்து அமெரிக்காவும் நேசப் படைகளும் உடனடியாக வெளியேற வேண்டுமென பங்களாதேஷ், பாகிஸ்தான், இந்தியா, அமெரிக்கா, ஜேர்மனி, லண்டன் பிரான்ஸ் உட்பட பல அரபு நாடுகளிலும் ஆர்ப்பாட்டங்கள் நடந்துவருகின்றன,

★ இஸ்ரேல் மீது ஈராக் ஏவுகணை தாக்குதல் நடைபெற்றதையடுத்து இஸ்ரேல் அமைச்சரவை அவசரமாகக் கூட்டப்பட்டது. படைதளபதிகளையும் பிரதமர் ஷமீர் அவசரமாக சந்தித்தார்.

★ ஈராக் இதுவரை இரசாயன, நச்சுவாயு ஆயுதங்களை பயன்படுத்தவில்லையென அமெரிக்கா தெரிவித்துள்ளது. இஸ்ரேல் மீது சாதாரண ஏவுகணைகளே தாக்கின.

★ இஸ்ரேல் பதிலடி கொடுக்கும் என அறிவித்ததையடுத்து ஜோர்தான், தனது நாட்டின் மேலாக இஸ்ரேல் விமானங்களோ, ஏவுகணைகளோ பறந்தால் சுட்டு வீழ்த்துமாறு படைகளுக்கு அவசர உத்தரவு பிறப்பித்துள்ளது.

### வளைகுடாவில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

உயர்ந்துள்ளது.

வளைகுடாவில் யுத்தம் துவங்குமுன் 50 ரூபாவாக விற்ற மண்ணெண்ணை யுத்தம் துவங்கியபின் 150 ரூபாவாக ஏறியுள்ளது.

வளைகுடாவிலிருந்து நேரடியாக யாழ். குடாவிற்கு எண்ணை வருகிறதாஎன்று மக்கள் மத்தியில் பெரும்கேள்வி எழுந்துள்ளது.

எங்களிந்துவின் சோதிபொன்று
நேற்று அணைந்தது நெஞ்சு கனத்தது
சொல்லியழவொரு வார்த்தை தேடுது
சொந்தங்களுடன் வேதனை பகிருது

யாழ். இந்துவின் முன்னாள் உப அதிபர்

திரு. பொன் மகேந்திரன்

அவர்களுக்கு எமது

கண்ணீர் அஞ்சலிகள்

யாழ். இந்துக்கல்லூரி மாணவர்கள்

[எ 994]

### இஸ்ரேல்

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

ரேல் யுத்தத்துக்கு பின்னர் நாடு முழுவதும், பலத்த உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக இஸ்ரேலிய பிரதமர் ஷாமிர் அறிவித்துள்ளார்.

இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63ம், இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991ம் ஆண்டு ஜனவரி மாதம் 19ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.

Registred as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/81.